செ.வெ.எண்: 45 / பிப்ரவரி நாள்: 23.02.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## சிறந்த வீரர்களுக்கான டென்சிங் நார்கே தேசிய சாகச விருது வழங்கப்படவுள்ளது

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இந்திய அரசு ஒவ்வொரு ஆண்டும், நாட்டிற்கு பெருமை தேடித்தரும் சிறந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்றுநர்களுக்கு டென்சிங் நார்கே தேசிய சாகச விருது வழங்கி கௌரவித்து வருகிறது. இவ்விருதுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இந்த டென்சிங் நார்கே விருதிற்கான விண்ணப்ப படிவம் மற்றும் இதர விபரங்களை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய இணையதளமான www.sdat.tn.gov.in லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் அலுவலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், SDAT- சீதக்காதி சேதுபதி விளையாட்டு அரங்கம், மாவட்ட ஆட்சியர் வளாகம், இராமநாதபுரம் - 623 503 , என்ற முகவரிக்கு 27.02.2016க்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் விபரங்களுக்கு 04567 - 230238 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**